# மான்மின் செய்திகள்
# Manmin News


Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## மாபெரும் வெடித்துசிதறும் வல்லமை! மான்மின் கோடை முகாம் 2016

### 30 நாடுகளிலிருந்து வந்த ஜனங்கள் பங்கேற்றனர், அற்புதங்களும் அடையாளங்களும் நிரம்பிவழிந்தன

மான்மின் கோடை முகாம் 2016 ஜியோன்பூக் மாகாணத்திலுள்ள மூஜூ என்ற இடத்திலுள்ள தேயூக்சன் பொழுதுபோக்கு இடத்தில் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்று, GCN TV வாயிலாக நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. வெளிநாடுகளில் இருந்து பிஷப்கள், போதகர்கள் மற்றும் விசுவாசிகள் உட்பட 1,200 பேர் பங்குப்பெற்றனர். ஒரே நேரத்தில் ஆங்கிலம், சீனம், ஜப்பானியம், ரஷியம், ஸ்பானியம், பிரெஞ்சு, தாய், வியட்நாமியம் மற்றும் மங்கோலியம் உட்பட பத்து மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டது. தேசமெங்கிலும் உஷ்ண அலையை குறித்த எச்சரிக்கை வந்தபோதிலும் அவர்கள் உகந்த சீதோஷ்ணநிலையில் குளுமையான புத்துணர்ச்சியளிக்கக்கூடிய தட்பவெட்பநிலையை அனுபவித்தனர். அவர்கள் ஆச்சரியமான அற்புதங்களை அனுபவித்ததால் அதிகமான விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் பெற்றுக்கொண்டனர்.



▲ பிறந்ததில் இருந்து காதுகேளாமல் இருந்த 44 வயதான சகோதரி பாங்ப்யூரிம் இந்த முகாம் மூலமாக கேட்கத் துவங்கியிருக்கிறார்கள். மேலும் எண்ணற்ற மக்கள் சுகமாகுதலின் கிரியைகளை அனுபவித்தனர், நல்ல பார்வைத்திறனை புதுப்பித்துக்கொண்டனர், சக்கர நாற்காலி மற்றும் ஊன்றுகோலின்றி நடக்க ஆரம்பித்தனர்.

### வெடித்து சிதறும் கிரியைகள் மற்றும் தேவனுடைய மகிமையினால் கருத்தரங்கு நிரம்பிவழிந்தது

முதல் நாள் இரவிலே, தலைமை போதகர் அறிவர். லீ அவர்கள் ஆகாய் 2:9ம் வசனத்தின் அடிப்படையில் ‘‘மகிமை’’ என்ற தலைப்பில் பிரசங்கித்தார். அவர் ஊழியத்தில் கடந்த 34 ஆண்டுகளாக தேவனுடைய அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் வல்லமையான கிரியைகளின் மூலமாக தேவனுடைய மகிமை வெளிப்படுவதை விவரித்தார். மேலும் அவர், ஒருவர் மெய்யாக இருதயத்திலிருந்து மனந்திரும்பினால், அவரால் தேவனுக்கு முன்பதாக எழுப்பி வைத்த பாவநடுச் சுவரை அழித்து, குணமாக்க முடியாத நோய்களிலிருந்தும் குணமாக முடியும் என்று சொன்னார். இதன் பிறகு அவர் தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தை நடத்தினார்; அவர் சுகத்திற்காக, இருதய பரிசுத்தத்திற்காகவும், வீடுகள், வேலைஸ்தலங்கள் மற்றும் தொழிலில் ஆசீர்வாதம் வரும்படியாகவும், குடும்ப சுவிசேஷத்திற்காகவும் ஊக்கமாக ஜெபித்தார்.

அவருடைய ஜெபத்தின் மூலமாக நுரையீரல் புற்றுநோய், குரல்வளை புற்றுநோய், மலக்குடல் புற்றுநோய், சர்க்கரை வியாதிகள், குடல்வாலழற்சி, காதுஎலும்பு முடக்கம், மூளை சிதைவுகள், பக்கவாதம், உடலின் இருபுற பக்கவாதம் உள்பட பல்வேறு வகை வியாதிகள் சுகமாயின. குறிப்பாக, இந்த வருடத்தில், குருட்டுத்தன்மை மற்றும் பார்வைக் கோளாரிலிருந்து அநேக ஜனங்கள் பார்வைத்திறனை புதுப்பித்துக் கொண்டனர். கண்புரை, கண்படல நோய் மற்றும் கார்னியா குறைபாடு போன்ற அநேக கண் சம்பந்தப்பட்ட வியாதிகள் சுகமாயின. காதுகேளாத, பேசமுடியாத மற்றும் பிறவி செவிடர்களாய் இருந்த அநேக மக்கள் சுகத்தைப் பெற்றுக்கொண்டனர்.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# இந்த இரகசியம் பெரியது

"இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன்"
(எபேசியர் 5:31–32)

மேலேயுள்ள வசனங்கள் கிறிஸ்தவர்களுக்கும், அவர்கள் மணவாளராகிய ஆண்டவருக்கும் இடையிலான உறவை குறிக்கின்றன. ஒரு மனுஷனும் ஒரு மனுஷியும் தங்களது பெற்றோர்களை விட்டு ஒரே மாம்சமாவது போல நாம் உலகத்தைப் பின்னே விட்டு விட்டு இயேசு கிறிஸ்துவோடு ஒன்றாவதென்பது எத்தனை மாபெரிதானதும் அருமையானதுமான ஓர் இரகசியம்? இப்போது நாம் எப்படி ஆண்டவரோடு நிஜமாக ஒன்றாக முடியும்?

### 1. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதால்

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்கள் தேவனுடைய பிள்ளைகள் ஆவார்கள். அவர்கள் விசுவாசத்தால் இயேசு கிறிஸ்துவோடு ஒன்றாக மாறும்போது, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுவார்கள். யோவான் 3:6 "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" என்று நமக்கு நினைப்பூட்டுகிறது. பரிசுத்த ஆவியானவர் நம் இருதயத்தில் வரும்போது, முந்தி மரித்திருந்த நம்முடைய ஆவி உயிர்ப்பிக்கப்படும். அவர் நம் ஆவிக்குப் பிறப்பு கொடுப்பார். நாம் ஆண்டவரைப் பின் பற்றுவோம்; அப்பொழுது ஆவியாக இருக்கிற தேவனுடைய பிள்ளைகளாகி அவரை "அப்பா" என்று நாம் அழைக்க முடியும் (ரோமர் 8:15; கலாத்தியர் 4:6).

முதலாவது, மனிதனுடைய இருதயம் காணக்கூடிய சத்தியமுள்ள இருதயம் மற்றும் காணக்கூடிய சத்தியத்திற்கு புறம்பான இருதயம் என்று பிரிக்கப்பட முடியும். நாம் முந்தைய இருதயத்தை "வெள்ளை இருதயம்" என்றும், பிந்தைய இருதயத்தை "கருப்பு இருதயம்" என்றும் அழைக்கலாம். தேவன் முதல் மனிதனுடைய நாசியிலே தமது ஜீவ சுவாசத்தை ஊதியபோது மனிதன் ஜீவ ஆத்துமாவானான். தேவன் அவனுக்கு சத்தியத்தை மட்டுமே போதித்து, அவன் இருதயத்தில் சத்தியத்தை நாட்டினார். அநேக காலங்கள் கடந்த பின்னர், ஆதாம் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திலிருந்து புசிக்க வேண்டாம் என்று தேவன் சொல்லிய வார்த்தையை அவன் கைக்கொள்ளாததால் கீழ்ப்படியாமை என்ற பாவத்தைச் செய்தான். தேவனோடுள்ள அவனுடைய உறவாடல் சேதமடைந்தது. பாவமும் சத்தியத்திற்குப் புறம்பானவைகளும் அவன் இருதயத்திற்குள் வந்தன.

பின் வேறொரு வகையான இருதயம், மனசாட்சி உருவானது. மனசாட்சி என்பது பெற்றோரிடத்திலிருந்து பெறப்பட்ட சுபாவ இயல்பும், தான் பார்த்து கேட்டவைகள் மூலமாக அடையப்பெற்ற பலதரப்பட்ட தகவல்கள் ஆகியவைகளுடன் கலந்து உருவானதாகும். அவன் சத்தியம் மற்றும் சத்தியத்திற்குப் புறம்பானவை ஆகிய இரண்டுடனும் கலந்த மதிப்பின் தரவுகள் மற்றும் நீதிகள் போன்றவற்றை உருவாக்கி வைத்துக்கொள்கிறான். இது தான் மனச்சாட்சி. நாம் கலந்துரையாடிய சத்தியமுள்ள இருதயம், சத்தியத்திற்குப் புறம்பான இருதயம் மற்றும் மனச்சாட்சி ஆகிய மூன்று வகையான இருதயங்களில் மனிதனுக்குள் தேவன் நாட்டிய சத்தியமுள்ள இருதயம் கிட்டத்தட்ட வெறுமையாகிவிட்டது. மேலும் மனிதர்களுடைய மனச்சாட்சி நம்முடைய கால கட்டத்தில் தானே அதிகமாக பொல்லாததாய் வளர்ந்து வருகின்றது.

### 2. பரிசுத்த ஆவியானவர் ஜீவ வித்தை முளைக்கச் செய்து, மரித்த நம்முடைய ஆவியை உயிர்ப்பிக்கிறார்

முதல் மனிதனாகிய ஆதாமின் நாசியில் தேவன் தமது ஜீவ சுவாசத்தை ஊத, மனுஷன் ஜீவாத்துமாவானான். ஆனால் கீழ்ப்படியாமை பாவத்தை அவன் செய்தபோது, கிட்டத்தட்ட ஜீவ சுவாசம் அனைத்தும் எடுக்கப்பட்டது. மேலும் அதன் படிமம் மட்டுமே எஞ்சியது; அந்த படிமம் தான் ஜீவ வித்து. மனிதன் தேவனோடு தொடர்புகொண்டு, தேவனால் சத்தியத்தைப் பெறும்போது அந்த ஜீவ வித்தானது இயங்க முடியும். எனினும், ஆதாமின் பாவத்தின் கணக்கினால், தேவனுடன் மனிதர்களுக்கு இருந்த உறவாடல் துண்டிக்கப்பட்டது. ஆகவே சத்தியத்திற்குப் புறம்பானவைகள் மனிதனுடைய இருதயத்திற்குள் நுழைந்து, இறுதியாக ஜீவ வித்தை மூடிவிட்டன. இதனால் ஜீவ வித்து செயலற்று, அதன் செயல்பாட்டின் நோக்கம் அதிகமதிகமாக சுருங்கி அது மரித்துப் போனது போன்ற நிலைக்கு வந்துவிட்டது.

சத்தியத்திற்குப் புறம்பானவைகளால் அது மூடப்பட்டதால் ஆவியாயிருக்கிற தேவனுடன் மனிதனின் உறவாடல் வேரோடு பிரிக்கப்பட்டு ஜீவ வித்து செயலிழந்த மற்றும் செயலற்ற நிலைக்குள்ளானது. இந்த நிலை தான் "மனிதனுடைய ஆவியின் மரணம்." இது அவனுடைய ஆவி முற்றிலும் மரித்துவிட்ட நிலையாகாது. ஆனால் அது இயங்காமல் நின்றுவிட்டு, உயிரடைவதற்காக காத்திருக்கிறது. இது பார்ப்பதற்கு செத்துப்போன தோற்றமுடைய ஒரு செடியானது அதில் உயிர் உள்ளவரையில் இறுதியாக வளர்ந்து மொட்டு விடுவது போலவே தான்.

மனிதனுடைய மரித்துப்போன ஆவி எப்போது உயிரடையும்? ஒரு தனிநபருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது தேவனுடைய ஒளியும் சத்திய ஒளியும் அவன் இருதயத்தின்மேல் பிரகாசிக்கும். அந்தச் சமயத்தில், அவனில் எஞ்சியுள்ள சத்தியமும் நல்லதுமான இருதயம் அவ்வொளியை ஏற்றுக்கொண்டு, இயேசு கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராகப் பெறுகிறது. பின்பு தேவன் அவன் இருதயத்தில் பரிசுத்த ஆவியை அனுப்புகிறார். அந்த பரிசுத்த ஆவியானவர் அந்த நபரில் உள்ள ஜீவ வித்தை முளைக்கச் செய்கிறார். இப்போது அது செயல்பட ஆரம்பிக்கிறது.

தேவனோடுள்ள உறவாடல் தொடங்குகிறது. அவனுக்கு மீண்டுமாக சத்தியத்தின் அறிவு வழங்கப்படுகிறது. வெறுப்பு மற்றும் அகந்தை போன்ற சத்தியத்திற்கு புறம்பானவைகளால் நிரப்பப்பட்டிருந்த அவனது இருதயம் அன்பு போன்ற சத்தியமுள்ளவைகளால் நிரப்பப்பட ஆரம்பிக்கிறது.

### 3. பரிசுத்த ஆவியானவர் நம்மில் உள்ள ஆவிக்குப் பிறப்பு கொடுக்கிறார்

பரிசுத்த ஆவியானவர் நம்மில் உள்ள ஆவிக்கு பிறப்புக் கொடுப்பதில் மிக முக்கியமான மூலப் பொருள் ஜெபமாயிருக்கிறது. நாம் ஊக்கமாக எந்தளவாய் ஜெபிக்கிறோமோ, அந்தளவாய் நாம் சத்தியத்திற்குப் புறம்பானவற்றை துண்டித்து எறிவதற்கு கிருபையும் பெலனையும் பெறுகிறோம். நாம் எவ்வளவு ஊக்கமாக ஜெபித்தாலும் நாம் நம்மில் உள்ள சுய எண்ணங்கள் மற்றும் சுய தோற்றங்களை அழிக்கும்வரையில் நம்முடைய ஜெபம் வீணாகவே போய் கொண்டிருக்கும்.

பரிசுத்த ஆவியானவர் சத்தியம் நிறைந்த இருதயத்தை ஆளுகை செய்து பரிசுத்த ஆவியானவரின் ஆசைகளின் நோக்கத்தில் நாம் வாழும்படி செய்வார். சாத்தான், நம்முடைய எண்ணங்களின் மூலம் கிரியை செய்வதால் நம்முடைய சத்தியத்திற்குப் புறம்பான இருதயத்தை ஆளுகைச் செய்வான். சத்தியத்திற்குப் புறம்பானவைகள் அதிகமாக இருக்கும்போது, நாம் சாத்தானால் சிந்தனைகளில் தாக்கப்படுவோம். இது நம்மை மாம்சத்தின் ஆசைகளின்படி வாழச் செய்து அழிவின் பாதையிலே நிறுத்தும்.

ஒரு தனிநபர் சத்தியத்தை எவ்வளவு கேட்டாலும் எவ்வளவு ஊக்கமாய் ஜெபித்தாலும்கூட, மாம்சீக சிந்தனைகளையும் தர்க்கங்களையும் அகற்றாமல், அவனால் பரிசுத்த ஆவியானவரின் ஆசையின்படி வாழ முடியாது (2 கொரிந்தியர் 10:5). அவனுடைய இருதயம் வெறுமையாக உணர்ந்து முரண்பாடுகளில் இருக்கும். மேலும், அந்த நபரால் தெளிவான மற்றும் வெளிப்படையான தேவனுடைய கிரியைகளை அனுபவிக்க முடியாது.

அவன் உள்ளிருந்து சத்தியத்திற்குப் புறம்பான இருதயத்தை அகற்றிவிட்டிருந்தாலும்கூட, அது அவனுடைய சோதனைகளின் முடிவாகிவிடாது. அவன் தன்னுடைய மனச்சாட்சியிலிருந்து அதாவது சுபாவத்தின் ஆழத்தில் மறைந்திருக்கும் பாவ சுபாவங்களை அகற்றுவதற்கு, தீமைகளை கண்டறிந்து அதை அகற்றும்படிக்கு வேலை செய்ய வேண்டும். மனசாட்சி (முன்னதாக விவரமாக சொல்லப்பட்டது) இப்போது அந்த நபருடைய சுபாவத்தை உருவாக்கும்.

மேலும் இதுதான் மிக ஆழமான இருதயம். இதைப் பற்றிய விழிப்புணர்வோடு அந்த நபர் இல்லாதிருப்பார். ஒரு நபருடைய சுபாவத்தில் இருக்கிற சத்தியத்திற்குப் புறம்பானவை தேவனுடைய நீதியோடு ஒத்துப்போகாது. ஆனால் அந்த நபருடைய பார்வையில் சரியானதாகவும், திருத்தமானதாகவும் தோன்றும். இந்தக் காரணத்தால் அவன் தன் சொந்த முயற்சியால் அதைக் கண்டறிந்து அகற்றுவது எளிமையானதல்ல.

தேவன் சோதனைகள் மூலமாக ஒவ்வொரு நபரும் தனது சுபாவத்தில் உள்ள சத்தியத்திற்குப் புறம்பானவைகளை கண்டறிய அனுமதிப்பதின் மூலம், அவனை பரிசுத்த பாத்திரமாக வனைகிறார். பரிசுத்த ஆவியின் உந்துதலில் அவர் வார்த்தையின் மூலம் உங்களை நீங்கள் கண்டறியும்போது, நீங்கள் உங்கள் சுபாவங்களில் உள்ள சத்தியமற்றவைகளை அதிதீவிரமாக அகற்ற முடியும்.

நீங்கள் தேவனுடைய வார்த்தை பிறருக்கு மட்டுமே பொருந்தும் என்று நினைத்து வார்த்தையின்படி உங்களை கண்டறிய முடியவில்லையென்றால், உங்களது விசுவாச வாழ்வின் வளர்ச்சி மெதுவாக தான் இருக்கும். இருப்பினும், உங்களது சுபாவத்தில் உள்ள சத்தியத்திற்குப் புறம்பானவைகளை கண்டறிந்து அவைகளை அகற்றினால், நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்ட ஆவிக்குரிய மனிதனாக மறுரூபமாவீர்கள்.

### 4. ஆண்டவரோடு ஒன்றாகும்போது

பரிசுத்த ஆவியானவர் நம்மில் உள்ள ஆவிக்குப் பிறப்புக் கொடுக்கும்போது, நாமும் நம்மில் சத்தியத்திற்கு முரணாக இருக்கிற சத்தியத்திற்குப் புறம்பானவைகளை அகற்றி, நம்முடைய சுய நீதிகளை நொறுக்கி சத்தியமுள்ள இருதயத்தை அடையும்போது, நாம் ஆண்டவேராடு ஒன்றாவோம்.

1 யோவான் 2 : 12ம் வசனம் முதல் ஒரு தனிநபர் ஆண்டவரோடு ஒன்றாகிற வளர்ச்சி கிரமமாகிய விசுவாசத்தின் முதிர்ச்சியின் நிலைகளை மனித வளர்ச்சிக்கு ஒப்பிட்டுச் சொல்கிறது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, பரிசுத்த ஆவியைப் பெற்று, இரட்சிப்பைப் பெறுகின்ற ஒரு நபரது விசுவாசத்தின் நிலை, "சிறுபிள்ளைகளின் விசுவாசத்திற்கு" குறிப்பிடப்படுகிறது.

ஒருவர் சத்தியத்தின்படி நடக்க போராடுகிற விசுவாச நிலை "பிள்ளைகளின் விசுவாசமாக" குறிப்பிடப்படுகிறது. அதே வேளையில் தேவனுடைய வார்த்தையின்படி அவர் வாழ்கிற விசுவாசத்தின் நிலை "வாலிபரின் விசுவாசமாக" குறிப்பிடப்படுகிறது. அந்த விசுவாசம் இன்னும் அதிகமாக வளர்ந்து விசுவாசத்தின் முழு அளவை அடைகின்றபோது அது "பிதாக்களின் விசுவாசமாகிறது."

நாம் பிதாக்களின் விசுவாசத்தை அடைந்து முழுவதுமாக ஆண்டவரோடு ஒன்றாகும் போது, நாம் ஜெபத்தில் கேட்டுக்கொள்வது எதுவானாலும் "நம்முடைய இருதயம் நம்மை குற்றவாளிகளாக தீர்க்காது." அதனால் நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டு அதைப் பெற்றுக்கொள்வோம் (1 யோவான் 3:21–22).

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, பரிசுத்த ஆவியானவரால் உங்களில் உள்ள ஆவிக்குப் பிறப்புக் கொடுத்து ஆண்டவரோடு முழுவதுமாக ஒன்றாவதால் இவ்வுலகிலும் ஆசீர்வாதமாக வாழும்படி நடத்தி, பரலோகத்தில் எல்லாவற்றிலும் மிகவும் அழகான மகிமையான வாசஸ்தலமான புதிய எருசலேமிலும் ஆசீர்வாதமான வாழ்வு நடத்த வேண்டும் என ஆண்டவரின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]





▲ அவளுடைய கணவர் கண்காணி சாமுவேல், ஆண்கள் குழுவின் துணைத் தலைவர்; கண்காணியை மார்கரெட், பெண்கள் குழுவின் தலைவி (இடதுபக்கத்திலிருந்து); இரட்டையர்கள் (கண்காணியை மார்கரெட் அவர்களுக்கு முன்பதாக) மற்றும் மற்ற குடும்ப அங்கத்தினர்கள்.

# “ஓய்வுநாளை (ஞாயிறு ஆராதனை) கடைப்பிடித்து, முழு தசமபாகம் கொடுப்பதே ஆசீர்வாதங்களுக்கான பாதையாகும்”

கண்காணியை மார்கரெட் அஸ்டிகா, வயது 46, நைரோபி மான்மின் பரிசுத்த சபை, கென்யா

நான் ஆர்வத்தோடுகூட பெந்தெகொஸ்தே சபைக்குச் சென்று கொண்டிருந்தேன். ஆனாலும் ஞாயிற்றுக்கிழமை கர்த்தருடைய நாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும் என்று எனக்கு அங்குப் போதிக்கவில்லை. இதனால் ஞாயிற்றுக் கிழமைகளில் நான் குடும்பத்தோடு வெளியே செல்லவும், எனக்குப் பழக்கமானவர்களை சந்திக்கிறவளாக இருந்தேன். சில சமயங்களில் பிறரைப் பற்றி தவறாகவும் பேசியிருக்கிறேன். அதுவெல்லாம் பாவம் என்று எனக்குத் தெரியாது; நான் பரலோகம் செல்ல முடியும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

2007ம் ஆண்டு டிசம்பரில் நான் நைரோபி மான்மின் பரிசுத்த சபைக்கு வந்தபொழுது, ஓய்வுநாளை கடைப்பிடிப்பதையும், முழு தசமபாகம் கொடுப்பதையும் குறித்து கற்றுக் கொண்டேன். பரலோகத்தில் மிகச் சிறந்த வாழ்விடமான புதிய எருசலேமைக் குறித்து நான் கேட்டேன். அந்த இடத்திற்குள் செல்வதற்கு நான் கோபம், வெறுப்பு போன்ற பாவச் சுபாவங்களை களைந்துப்போட்டு, தேவனுடைய வார்த்தையின்படி வாழ வேண்டும் என்று உணர்ந்தேன். அது முதற்கொண்டு என்னுடைய வாழ்க்கை புதியதாக மாறத் துவங்கியது.

நான் ஒரு தேனீவளர்ப்பு தொழிற்சாலையில் வர்த்தக வளர்ச்சி மேலாளராக பணியாற்றி கொண்டிருந்தேன். நான் மிகுந்த இறுமாப்பும் கண்டிப்பும் நிறைந்தவளாய் இருந்த காரணத்தால் வேலையாட்கள் என்னை ‘இரும்பு மனுஷி’ என்று அழைத்தனர். நான் இந்த குணத்தையும் மாற்றத் தொடங்கினேன்; அவர்களை தாழ்மையோடும், மென்மையோடும் நடத்தினேன். இதனால் தொழிற்சாலையிலிருந்து அதிக அங்கீகாரத்தை நான் பெற்றுக்கொண்டு, முதன்மை மேலாளராக பதவி உயர்வடைந்தேன்.

2009ம் ஆண்டு மே மாதத்தில், நான் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தேன். அவர்கள் ஏழு மாதத்தில் பிறந்ததினால் ஒரு பிள்ளை 1.7 கிலோகிராமாகவும், மற்றொரு பிள்ளை 1.8 கிலோகிராமாகவும் இருந்தனர். ஏழு நாளுக்கு கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தனர்; வளரும் நாட்களில் அடிக்கடி வியாதிப்பட்டனர். நான் பிஷப் அறிவர். மியாங்ஹோ ச்யாங் அவர்களிடம் ஜெபத்தைப் பெறும்படி சென்றேன். அவர் என்னிடம், “நீ தசமபாகம் கொடுக்காவிட்டால் தேவன் உன் பிள்ளைகளைப் பாதுகாக்கமாட்டார்” என்று கூறினார். என் இரட்டைப் பிள்ளைகளுடைய எதிர்பாராத மருத்துவச் செலவை காரணம்காட்டி நான் சரியாக என்னுடைய தசமபாகத்தைக் கொடுக்காமல் இருந்தேன். உடனடியாக நான் மனந்திரும்பினேன்; இனி எந்தச் சூழ்நிலை வந்தாலும் தசமபாகத்தைக் கொடுப்பேன் என்று என்னுடைய மனதில் தீர்மானம் எடுத்தேன்.

நான் கர்த்தருடைய நாளை கடைப்பிடித்து, முழு தசமபாகத்தையும் கொடுக்கத் துவங்கிய பொழுது என் பிள்ளைகள் உட்பட என்னுடைய முழு குடும்பமும் தேவனுடைய பாதுகாப்பின்கீழ் ஆரோக்கியமாக காக்கப்பட்டனர்; என்னுடைய வேலைஸ்தலத்திலும் ஆசீர்வாதங்கள் நிரம்பி வழிந்தன. ஒரு விபத்திலிருந்தும்கூட நான் பாதுகாக்கப்பட்டேன்.

2015ம் ஆண்டு, ஜனவரி மாதத்தில், நான் ஒரு பேருந்தில் ஏற முயற்சித்தேன். திடீரென்று கடைவீதியில் நான் வாங்காமல் மறந்த ஒரு பொருள் என் நினைவிற்கு வந்தது. எனவே பேருந்தில் ஏறாமல், அந்தப் பொருளை வாங்கிவிட்டு அடுத்த பேருந்தில் ஏறினேன். நான் பேருந்தில் சென்று கொண்டிருந்தபொழுது ஒரு போக்குவரத்து விபத்தினால் அநேகர் காயப்பட்டு சாலையில் இருப்பதைப் பார்த்தேன். நான் முன்பு ஏறாமல் விட்ட அந்தப் பேருந்துதான் விபத்தில் சிக்கிக் கொண்டது.

நான் பரிசுத்தமாகுதலின் சுவிசேஷத்தைக் குறித்து கேள்விப்பட்ட பிறகு, என் சொந்த ஊரில் (வடக்கு கென்யாவிலுள்ள புட்டேரி என்ற இடம்) உள்ளவர்களுக்கும் அதை அறிவிக்கும்படி வாஞ்சையை பெற்றுக் கொண்டேன். இதற்கிடையில், என் கணவருடைய அண்ணன் பங்குபெறுகிற சபையின் போதகர் ஜோசப் அவர்கள் தன்னுடைய சபைக்கு நைரோபி மான்மின் பரிசுத்த சபையின் போதகர் அறிவர். மியாங்ஹோ ச்யாங் அவர்களை போதகர்களுக்கான கருத்தரங்கை நடத்தும்படி அழைத்ததை நான் கேள்விப்பட்டேன். பங்குப்பெற்ற போதகர்கள் மான்மினோடு ஒன்றாக இணைய விரும்பினார்கள். அது முதற்கொண்டு அவர்களும் பரிசுத்த சுவிசேஷத்தை கற்றுக்கொண்டு வருகின்றனர். அல்லேலூயா!

# “நான் தோல் அழற்சி ஒவ்வாமையிலிருந்து பூரண சுகமடைந்தேன்”



சகோதரி மிரி பார்க், வயது 18, மாணவர்கள் ஞாயிறு பள்ளி, மான்மின் மத்திய சபை

நான் என் அம்மாவோடு மான்மின் மத்திய சபையில் 2014ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பதிவு செய்த பிறகு, நான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டேன். இதற்கிடையில் நான் சில நாடகத் தொடர்களின் தொகுப்புகளை பார்க்க நேர்ந்தது. ஆரம்பத்தில் ஒன்றுமில்லாததாக தோன்றிய அவைகளை நான் மீண்டும் பார்க்க தொடங்கி, அவைகளை நன்றாய் அனுபவிக்க தொடங்கினேன். இப்படியாக உலக காரியங்கள் என்னுடைய சிந்தைக்குள் வந்ததினால், நான் ஆவியானவரின் நிறைவை இழந்துப்போனேன்; என்னுடைய விசுவாசமும் குளிர்ந்து போனது.

2015ம் ஆண்டு அக்டோபரில், என்னுடைய காது மடலின் ஓரத்தில் அரிப்பை உணர்ந்தேன். அந்த இடத்தை நான் சொரிந்தபொழுது சீழ் கசிந்து, என்னுடைய கன்னத்திலும் கழுத்திலும் பரவியது. அது தோல்அழற்சி ஒவ்வாமை நோயாகும். நான் உலகக் காரியங்களிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு, ஆதியில் பெற்ற அன்பை புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். எனினும் அது அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை.



ஜெபத்திற்கு முன்பு
ஜெபத்திற்கு பின்பு

ஒரு நாளில் எனக்கு ஒரு கனவு வந்தது. அந்தக் கனவில் நான் நாடகத் தொடர்களைப் பார்க்கும்படி என் கணினியை இயக்கினேன். அப்பொழுது திடீரென்று அதற்குள் இருந்து கருப்பு புகை போன்ற உருவங்கள் வெளியே வந்தன; ஒரு பேயின் சத்தத்தையும் கேட்டேன். நான் அதிர்ந்தவளாய் கணினியை அணைத்து விட்டேன். அதன்பிறகு வேறு ஒரு சம்பவத்தைப் பார்த்தேன். ஒரு அழகான பையன் என்னுடைய கையில் ஜொலிக்கும் மோதிரம் ஒன்றை கொடுத்தான். நான் அந்த மோதிரத்தை என் விரலில் அணிந்த உடன் அதுவரை ஜொலித்துக் கொண்டிருந்த அது கருப்பாக மாறியது, என் கையும்கூட கருப்பாக மாறியது. இந்தக் கனவை நான் கண்ட பிறகு, தேவனுடைய அன்பை உணர்ந்தேன்; உலகத்திலிருந்து என்னை தூரப்படுத்திக் கொள்ள வேண்டுமென நான் தீர்மானித்தேன். எனினும், என்னுடைய தோல் அழற்சி ஒவ்வாமை வியாதி அதிகரித்துக் கொண்டே போய் மோசமானது.

2016ம் ஆண்டு மே மாதத்தில், என்னுடைய நெற்றியை தவிர்த்து முகம் முழுவதும் அது பரவியது. என் முகத்தில் எண்ணற்ற ஊசிகள் குத்தியதைப் போன்ற வலியை உணர்ந்தேன். அதிகமாக அரித்ததால் தூங்கிக் கொண்டிருந்த பொழுது நான் அறியாமலேயே பாதிக்கப்பட்ட பகுதிகளை சொரிந்து விட்டேன். தூக்கத்தில் இருந்து நான் எழும்பியபிறகு, சொரிந்ததால் வழிந்த இரத்தம் ஒரு ஓடு போல உருவாகியிருந்தது. நான் தூங்கப்போகும்பொழுது என் கைகளை கூட கட்டிப்போடும்படி முயற்சி செய்திருக்கிறேன்.

2016ல், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ தம்முடைய ஜெப வீட்டிற்கு மாணவர்களை அழைத்தார். மே 14ம் தேதி, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் அங்கு சென்றோம். நான் மிகுந்த வலியில் இருந்தேன், மிகுந்த அரிப்பு இருந்தது. பாதிப்படைந்த சருமமானது கிழிக்கப்படுவதைப் போன்று நான் உணர்ந்தேன். நான் ஜெபத்தைப் பெறும்படி தலைமைப் போதகரிடம் சென்றேன். என் தோற்றத்தைக் குறித்து வெட்கப்பட்டதால், நான் விரக்தியடைந்தேன். மற்ற நண்பர்கள் பிரகாச புன்னகை நிறைந்த முகத்தோடு காணப்பட்டனர். ஆனால் நானோ சிவந்த சீழ் நிறைந்த புண்கள் உள்ள முகத்தோடு காணப்பட்டேன். நான் கண்ணீர் சிந்தினேன். தலைமை போதகர் விசுவாசத்தோடு ஜெபத்தைப் பெற்றுக் கொள் என்று என்னிடம் சொன்னார்.

அதன் பிறகு ஒரு அமைதலான இடத்தைப் பார்த்து, என்னுடைய முழங்காலில் நின்று நான் ஜெபித்தேன். நான் என்னுடைய தோல் அழற்சி ஒவ்வாமையிலிருந்து விரைவாக சுகம் பெற்று, என்னுடைய நல்ல முகத் தோற்றத்தை தலைமை போதகருக்கு காண்பிக்க வேண்டும் என்று விரும்பினேன். இதன்மூலம் தேவன் நான் ஒரு அழகான வெளிச்சத்தின் மகளாக மாற விரும்புகிறார் என்று உணர்ந்தேன். என்மீதான தேவ அன்பை உணர்ந்தேன். நான் இதயத்தில் சோர்வடைந்து, குறை பேசியதற்காக கண்ணீரோடு மனந்திரும்பினேன். ஜெபத்திற்குப் பிறகு, என் முகத்தில் எவ்வித வலியையும் உணரவில்லை. வலி முற்றிலும் மறைந்துப் போயிருந்தது.

இரவு உணவிற்கு முன்பு மறுபடியும் தலைமை போதகர் என்னை அழைத்தார். அவர் என்னிடம் மிகவும் கனிவோடு என் சுபாவத்தில் இருக்கும் தீமைகளை அகற்றிவிடு என்று சொல்லி மீண்டும் எனக்காக ஜெபித்தார். என் இருதயம் அப்பொழுது மிகுந்த மகிழ்ச்சியாலும், நன்றியாலும் நிறைந்தது. புண்களிலிருந்து வழிந்த சீழ் நின்றுபோனது, அரிப்பினால் உண்டான எரிச்சலும் குறைந்துப் போனது; அதனால் நான் நன்றாக தூங்க முடிந்தது. நான் அநுதினமும் காலையில் என் முகத்தை கழுவிய பொழுது பாதிப்படைந்திருந்த தோலின் பகுதிகள் விழுந்தன. இப்பொழுது நான் ஜொலிக்கிற தெளிந்த தோலைப் பெற்றிருக்கிறேன்.

கூடுதலாக, நான் தேவனால் சுகத்தைப் பெற்றால் சபைக்கு வருவேன் என்று சொன்ன என் அப்பா இப்பொழுது கர்த்தருடைய நாளை கடைப்பிடிக்க துவங்கியுள்ளார்.

எந்நேரமும் நன்மையானவைகளை எனக்கு அருளுகிற என் தேவனுக்கு சகல மகிமையையும் நன்றிகளையும் செலுத்துகிறேன். எனக்காக பாரத்தோடு ஜெபித்த தலைமை போதகருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



## மேகங்கள் மற்றும் காற்றின்மூலம் கட்டுப்படுத்தப்பட்ட உகந்த சீதோஷ்ணநிலையில் நடைபெற்ற தடகளப் போட்டிகள்

மான்மின் கோடை முகாம் 2016ன் இரண்டாம் நாளில், தடகளப் போட்டிகள் நடைபெற்றன. அதில் பங்கெடுத்த நான்கு அணிகள் – 1, 2 மற்றும் 3வது மாகாண தளங்கள் மற்றும் கிளை சபைகள் நற்குணத்தோடு போட்டியிட்டன. 21 தங்கப் பதங்கங்களுக்கான 10 வகையிலான போட்டிகள் நடைபெற்றன. அவை : கயிறு இழுத்தல், பலூன்பந்து ஊருட்டிச் செல்லும் ஓட்டம், 100மீ ஓட்டம், கைப்பந்தாட்டம் (ஆண்கள்), சிறு கால்பந்தாட்டம் (ஆண்கள்), நீண்ட தூர ஓட்டம், கொரிய மல்யுத்தம் (ஆண்கள்), கை மல்யுத்தம், தொடர் ஓட்டம் மற்றும் புதியதாக இணைக்கப்பட்ட பேட்மிண்டன் போன்றவையாகும். இந்த வருடம், 3வது மாகாண தளமானது முதன் முறையாக எட்டு தங்கப்பதக்கத்தோடு வெற்றி பெற்றது. உற்சாகமூட்டிய அணிக்கான விருது 1வது மாகாண தளத்திற்குச் சென்றது. மிகவும் மதிப்புமிக்க ஆட்டக்காரர்களுக்கான விருது கண்காணி தேசங் கிம் மற்றும் சகோதரி ஜேயெ லீக்கு சென்றது.

இந்த தடகளப் போட்டிகள் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. அந்த நாளின் நண்பகலில் போட்டிகள் நடந்தபோதிலும், தேவன் சூரியனை மேகங்கள் சூழும்படிச் செய்து, மிகச் சிறந்த தட்பவெட்பத்தில் அவர்கள் நிகழ்ச்சிகளை அனுபவிக்கும்படிக்கு குளுமையான காற்றை வீசப்பண்ணினார். கொரிய தேசத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இருந்த மான்மின் அங்கத்தினர்கள் பரிசுத்த ஆவியினால் ஒன்றிணைந்தனர்.

## நற்குணம் மற்றும் அன்பின் மாபெரும் வெடித்துகிளம்பும் அக்கினி முகாம் துதி ஆராதனை

மூன்றாம் நாளின் இரவில், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அக்கினி முகாம் துதி ஆராதனையை நடத்தினார். அவர், இந்த முகாம் முழுவதும் மேகங்களினாலும் காற்றினாலும் தட்பவெட்பநிலையை கட்டுப்படுத்தி அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் வல்லமையான கிரியைகளை அனுபவிக்கும்படிக்கு நடத்தின தேவனுடைய கிருபையை மறக்க வேண்டாம் என்று விசுவாசிகளை வலியுறுத்தினார். மேலும் அவர், ஆண்டவர் மறுபடியும் வரும்மட்டும் பரலோகத்தில் மிகவும் அழகான வாசஸ்தலமாகிய புதிய எருசலேமை நோக்கி ஊக்கமாக ஓடும்படியாக அவர்களிடம் கூறினார். அவர் துதிஆராதனையை நடத்தியபொழுது, பங்குபெற்ற மக்கள் இருதயத்தோடு துதிகளை ஏறெடுத்தனர்; தேவனுடைய அன்பினாலும் நிரப்பப்பட்டனர்.

இருளான வானத்தை ஒளிகளால் அலங்கரித்த வானவேடிக்கைகளை அவர்கள் பார்த்தபொழுது, அவர்கள் தாங்கள் புதிய எருசலேமில் நடைபெறும் விருந்தில் இருப்பதைப் போன்று உணர்ந்து ஈர்க்கப்பட்டனர்; மேலும் பரலோகத்திற்கான அதிக நம்பிக்கையையும் பெற்றுக் கொண்டனர். அவர்கள் தங்களது இருதயத்தில் முடிவில்லாத தேவனுடைய அன்பை பதித்துக் கொண்டனர். அவர்கள் மான்மின் ஊழியத்தின் மூன்றாம் நிலையில் அசாதாரணமான ஆவிக்குரிய வளர்ச்சியின்மூலம் மகிமையின் கனிகளாக மாறும்படிக்கு அதீதமான நம்பிக்கையை பெற்றுக் கொண்டனர்.



GCN
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com